DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரியப்பன் | Father/Husband Name : காளியப்பன் |
| Age : 38 | Village : பெரியகொல்லபட்டி |
| Taluk : | Calling : கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23 Mar 2026
(Accused Present)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் பெரியகொல்லபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், என்னுடைய உறவினர்கள் ஆவார்கள்.

2. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் இரவு 07.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சத்தம்போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அங்கு சென்றபோது கூட்டமாக இருந்து சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களை விலக்கிவிட்டபோது கம்பி பட்டு என்னுடைய மூக்கில் காயம் ஏற்பட்டது. அந்த காயத்திற்கு எதிரிகளுக்கும் எவ்விதமாக சம்மந்தமும் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் புகார் எழுதி என்னுடைய மனைவியிடம் கொடுத்துவிட்டார்கள். அதை நான் படித்து பார்க்கவில்லை. புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆனார் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. **(புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டேன். சமாதானமாக செல்ல எதிரிகள் என்னை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை. எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன். (**சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

4. கடந்த 18.09.2021ம் தேதி 20.30 மணியளவில் எனது வீட்டு முன்பாக வைத்து எனது வீட்டின் முன்பாக வைத்து இவ்வழக்கின் எதிரிகள் என்னை தகாத வார்த்தைகளால் பேசி கொலைமிரட்டல் விடுத்தார்களா என்றால் இல்லை. சம்பவத்தின்போது 1வது எதிரி இரும்பு பைப்பால் எனது மூக்கில் அடித்து எலும்பு முறிவு ஏற்படுத்தினார் என்றால் இல்லை. எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.